Wondershare
PDFelement

அனைத்து உரிமைகளும் பெற்றுது

# மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு

## அறிவுசார் கணிப்பீடு – ஜூலை 2022

## தாதி உதவியாளர்

## தேசிய தொழிற்தகைமை மட்டம் 04

**நேரம்: 1 ½ மணித்தியாலங்கள்**

**<u>பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்</u>**

- அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குக.
- 1 தொடக்கம் 50 வரையான வினாக்கள் தொடர்பாக தரப்பட்டுள்ள (a), (b), (c), (d) ஆகிய விடைகளுள் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையினை தேர்வு செய்க.
- வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் உங்களால் தேர்வு செய்யப்படும் ஒவ்வொரு வினாக்களுக்குமான விடைகளுக்குரிய இலக்கத்தில் (x) என்ற அடையாளத்தினை இடுக.
- இவ் வினாத்தாள் 08 பக்கங்களைக் கொண்டுள்ளது.

---

### பகுதி 1

1. *E. coli* ஆனது
   a) ஒரு கிராம் எதிர் பக்ரீரியா
   b) ஒரு கிராம் நேர் பக்ரீரியா
   c) ஒரு புரோட்டோசோவா
   d) ஒரு ஸ்பைறோகீற்

2. ……………….. மற்றும் ……………….. ஆகியவை வைத்தியசாலைகளில் நுண்ணங்கித் தொற்று ஏற்படுவதற்கான பொதுவான காரணிகளாகும்.
   a) பக்ரீரியா, பங்கசு
   b) ஸ்ரபைலோகொக்கை, ஈ. கோலை
   c) ஸ்ரபைலோகொக்கை, சூடோமொனாஸ்
   d) ஈ-கோலை, சூடோமொனாஸ்

3. தொற்றுநீக்குவதற்கான மிகவும் இலகுவான வழிமுறை ஆவது,
   a) நீராவியால் தொற்று நீக்குதல்
   b) ஈர வெப்பம்
   c) உலர் வெப்பம்
   d) கதிர்வீச்சு

4. இழந்து போன உடலின் பகுதியை ஈடுசெய்யும் கருவியினைக் குறிப்பிட பயன்படும் சொல்
   a) புரோனேசன் (Pronation)
   b) அப்டக்சன் (Abduction)
   c) எக்ஸ்ரேனல் றொட்டேசன் (External rotation)
   d) புரொஸ்தீசிஸ் (Prosthesis)

Wondershare PDFelement

5. ஒரு வாடிக்கையாளரின் இடது பக்கம் பலவீனமாக காணப்படின், சேட்டின் எந்த பகுதியை முதலில் அணிய வேண்டும்?
   a) இரண்டு கைகளையும்
   b) இடது கை
   c) வாடிக்கையாளரின் தேர்வு
   d) வலது கை

6. நீங்கள் வாடிக்கையாளர் தொடர்பான தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கு பொருத்தமான நபர்,
   a) எந்த ஒரு பொருத்தமாகத் தோன்றும் தாதி உதவியாளர்
   b) வாடிக்கையாளரின் குடும்ப உறுப்பினர்
   c) வாடிக்கையாளருடன் அறையை பகிர்ந்து கொள்பவர்
   d) அடுத்த வேலை நேரத்திற்கான ஊழியர்

7. பதட்டமாக உள்ள ஒரு வாடிக்கையாளரை நீங்கள் பராமரிக்கும் போது, நீங்கள் செய்ய வேண்டியது?
   a) சத்தமாக கதைக்க வேண்டும் அப்போது தான் வாடிக்கையாளரினால் அறிவுறுத்தலை கேட்க முடியும்.
   b) வாடிக்கையாளரிற்கான பராமரப்பினை மீள ஒழுங்கமைக்குமாறு கேட்டல்
   c) ஆறுதலாக, அமைதியாக உறுதிப்படுத்தும் விதமாக கதைத்தல்
   d) வாடிக்கையாளரை அமைதியாக இருக்கும்படி கேட்டல்

8. வாடிக்கையாளரின் படுக்கையின் பக்க கைபிடிகள் போடப்படுவதன் நோக்கம் ஆவது,
   a) அவற்றை ஒரு கட்டுப்படுத்தலாகப் பயன்படுத்துதல்
   b) அழைப்பிற்கான இணைப்பினை பெற்றுக்கொள்வதற்கான இடத்தினை பெற்றுக் கொள்ளல்
   c) வாடிக்கையாளரை காயத்தில் இருந்து பாதுகாத்தல்
   d) வாடிக்கையாளரை இதமான வெப்ப நிலையில் பேணுதல்

Wondershare PDFelement

9. குடும்ப உறுப்பினரின் மரணத்தினை ஏற்றுக் கொள்ளாத வாடிக்கையாளர் ஒருவரிற்கு நீர் எவ்வாறு உதவி செய்வீர்?
   a) வாடிக்கையாளரை தனிமையில் விடுதல்
   b) வாடிக்கையாளரை இழப்பினை ஏற்றுக் கொள்ளச் செய்தல்
   c) வாடிக்கையாளரை கதைப்பதற்கு தூண்டுதல்
   d) தனிநபர் செயற்பாடுகனை எதிர்த்தல்

10. பின்வருவனவற்றுள் முற்றாக காது கேளாத வாடிக்கையாளர் ஒருவருடன் தொடர்பாடலினை மேற்கொள்வதற்கு மிகவும் சிறந்த வழிமுறை எது?
   a) அடிக்கடி சிரித்தல் மற்றும் சத்தமாக கதைத்தல்
   b) அடிக்கடி சிரித்தல் மற்றும் வேகமாக கதைத்தல்
   c) கண் தொடர்பினை தவிர்த்தல்
   d) தகவல்களை எழுதிக்காட்டுதல்

11. ஓர் ஆண் வாடிக்கையாளரின் உடலை புரட்டும் போது "கதிற்றர்" (catheter) கழற்றப்படுவதை தவிர்ப்பதற்கு அது ஒட்டப்பட வேண்டியது வாடிக்கையாளரின்,
   a) படுக்கை விரிப்புடன்
   b) மேல் தொடைப் பகுதியுடன்
   c) கட்டில் சட்டகத்துடன்
   d) இடுப்பு பகுதியுடன்

Wondershare PDFelement

12. ஒரு தாதி உதவியாளர் கட்டாயமாக கையுறை அணிந்து கொள்ள வேண்டியது,
    a) வாடிக்கையாளரிற்கு உணவு ஊட்டும் போது
    b) "பெரனியல்" (perineal) பராமரிப்பினை மேற்கொள்ளும் போது
    c) முதுகுப்புற மசாஜ் இனை வழங்கும் போது
    d) பல்வேறு உடற் பயிற்சிகளை மேற்கொள்ளும் போது

13. வாடிக்கையாளரிற்கு உடையினை அணிவிக்க ஆயத்தமாகும் போது தாதி உதவியாளர் செய்ய வேண்டியது,
    a) அவரால் உடனடியாக எடுக்கக்கூடிய முதல் ஆடையை எடுத்தல்
    b) வாடிக்கையாளரிடம் அணிய வேண்டிய ஆடையின் தெரிவை விடுதல்
    c) வாடிக்கையாளர் முதல்நாள் அணிந்த ஆடைகளை பயன்படுத்தல்
    d) தாதி உதவிாளரிற்கு தனிப்பட்ட ரீதியில் பிடித்த ஆடையை தெரிவு செய்தல்

14. வாடிக்கையாளரின் அறையின் தீப்பற்றியதை கண்டவுடன் நீர் செய்ய வேண்டிய முதலாவது விடயம்,
    a) தாதி பொறுப்பாளரை அழைத்தல்
    b) தீயை அணைப்பதற்கு முயற்சி செய்தல்
    c) ஒரு யன்னலை திறத்தல்
    d) வாடிக்கையாளரை அந்த இடத்தில் இருந்து அகற்றுதல்

15. பின்வருவனவற்றுள் எது வெளியேறும் சலத்தின் சரியான அளவாகும்?
    a) 40 oz
    b) 300 ml
    c) 2 cups
    d) 1 quart

16. கீழ்வருவனவற்றுள் எது தவிர்ந்த அனைத்து சூழ்நிலைகளும் துஷ்பிரயோகம் அல்லது அலட்சியத்திற்கான உதாரணங்களாகும்?
    a) மருத்துவரின் உத்தரவிற்கு இணங்க வாடிக்கையாரை கட்டுப்படுத்தல்
    b) குளியல் தொட்டியினுள் வாடிக்கையாளரை தனியாக விட்டுச் செல்லுதல்
    c) வாடிக்கையாளரிற்கு உணவை வழங்காமல் அவரை அச்சுறுத்துதல்
    d) வாடிக்கையாளரை ஈரமான மற்றும் சுத்தமற்ற படுக்கையில் விடுதல்

17. வாடிக்கையாளர் ஒருவர் இறுதியாக இழக்கும் உணர்ச்சி ஆவது,
    a) மணம்
    b) கேட்டல்
    c) சுவை
    d) பார்வை

18. சாதாரண வயதாதல் செயன்முறையை மிகச்சரியாக விபரிப்பது?
    a) மற்றையவர்களில் தங்கியுள்ளவர்களாக மற்றும் குழந்தைகள் போன்று மாறும் போது
    b) அல்சீமர் நோயிற்கான அறிகுறிகளை காட்டும் போது
    c) சாதாரண உடலியல் தொழிற்பாடுகள் மற்றும் உணர்ச்சிகள் குறையும் போது
    d) 65 வயதிற்கு மேற்படும் போது

Wondershare PDFelement

Wondershare PDFelement

19. வாடிக்கையாளர் குழப்ப நிலையில் உள்ள போது நீங்கள் செய்ய வேண்டியது?
    a) அவர் சாதாரண நிலைக்கு வரும் வரை அவரை தவிர்த்தல்
    b) அவரை கட்டுப்படுத்தி வைத்திருத்தல், இதன் மூலம் அவர் தன்னை காயப்படுத்திக் கொள்ளதை தடுக்கலாம்
    c) அவரை ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்து விலக்கி வைத்தல்
    d) அவரிற்கு அறிமுகமான பொருட்கள் அல்லது நபர்களை இனங்காண உதவி செய்தல்

20. கடுமையான வலி மற்றும் பதட்டம் ஆகியன நாடித்துடிப்பு வீதத்தினை அதிகரிப்பதற்கான காரணம் ஆவது,
    a) பரிவு நரம்புகளை பாதித்தல்
    b) பரபரிவு நரம்புகளை பாதித்தல்
    c) பரபரிவு நரம்புகளை தூண்டுதல்
    d) பரிவு நரம்புகளைதூண்டுதல்

21. அசுத்தமான அல்லது தொற்று நீக்கப்படாத உடையினை மாற்றும் போது தாதி உதவியாளர் தனது கைகளை கழுவ வேண்டியது,
    a) செயன்முறையை ஆரம்பிக்க முன்னர்
    b) செயன்முறையை முடித்த பின்னர்
    c) செயன்முறையின் போது
    d) செயன்முறையினை ஆரம்பிக்க முன்னரும் முடித்த பின்னரும்

22. வாடிக்கையாளரின் அறையில் வைக்கப்பட்ட ஆனால் பாவிக்கப்படாத சுத்தமான படுக்கை விரிப்பானது,
    a) படுக்கை விரிப்பு அலுமாரிக்கு கொண்டு செல்லப்பட வேண்டும்
    b) அடுத்த அறையில் உள்ள வாடிக்கையாளரிற்கு பயன்படுத்தப்பட வேண்டும்
    c) தாதிப் பொறுப்பாளரிடம் எடுத்துச் செல்லப்பட வேண்டும்
    d) அழுக்கு படுக்கை விரிப்புகளை இடும் கொள்கலனினுள் இட வேண்டும்.

23. நினைவுள்ள வாடிக்கையாளர் ஒருவர் வைத்தியசாலையின் குளியலறையின் தரையில் விழுந்திருப்பதை அவதானிக்கும் போது நீங்கள் செய்ய வேண்டிய **முதல்** விடயம்?
    a) வாடிக்கையாளர் எழுந்து அமர்வதற்கு உதவி செய்தல்
    b) தாதிப் பொறுப்பாளரிடம் உதவியாளர்களை கோருதல்
    c) வாடிக்கையாளரிற்கு நீர் அருந்தக் கொடுத்தல்
    d) காயங்கள் உள்ளதா என பரிசோதித்தல்

24. வாடிக்கையாளரிற்கு உரிமை உள்ளது,
    a) எந்த இடத்திலும் புகைப்பதற்கு
    b) தொலைபேசியில் பேசுவதற்கு
    c) வைத்தியசாலையின் எந்த இடத்திற்கும் செல்வதற்கு
    d) ஏனைய வாடிக்கையாளர்களின் மருத்துவ குறிப்புக்களை பார்ப்பதற்கு

25. ஒரு வாடிக்கையாளரிற்கு இடுப்பு பட்டியை அணிவிக்கும் போது நீங்கள் செய்ய வேண்டியது,
    a) ஒவ்வொரு 4 மணித்தியலத்திற்கு ஒரு முறை அதனை தளர்த்துதல்
    b) தோல் அழற்சிக்கான அறிகுறி தென்படுகின்றதா என பரிசோதித்தல்
    c) கட்டுப்படுத்தும் பட்டியை பக்க கைபிடியுடன் இணைத்தல்
    d) வாடிக்கையாளர் அசைய முடியாதவாறு பட்டியை இறுக்கமாக இணைத்தல்

Wondershare PDFelement

26. நோய்த் தொற்று பரவலை தடுப்பதற்கு, வாடிக்கையாளரின் படுக்கையிலிருந்து அகற்றப்பட்ட படுக்கை விரிப்பினை தாதி உதவியாளர் ஒருவர் எவ்வாறு கையாள வேண்டும்?
    a) காற்றில் உதறுதல்
    b) நிலத்தில் சுத்தமான அடுக்காக வைத்தல்
    c) தாதி உதவியாளரின் உடலிற்கு நெருக்கமாக கொண்டு செல்லுதல்
    d) அழுக்கு துணி கூடையினுள் இடுதல்

27. ஒரு வாடிக்கையாளரின் நிலையை மாற்ற வேண்டும். ஆனால் அவர் மிகவும் பாரமானவர். தாதி உதவியாளரிற்கு தன்னால் அவரை அசைக்க முடியும் என்ற நிச்சயம் இல்லை. எனவே அவர் செய்ய வேண்டியது?
    a) வாடிக்கையாளரை தனியாக அசைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்
    b) அசைப்பதற்கு அவரின் குடும்பத்தினரை அழைக்க வேண்டும்
    c) வேறொரு தாதி உதவியாளரிடம் உதவி கேட்க வேண்டும்
    d) வேறொரு வேலையை செய்ய போக வேண்டும்

28. வாடிக்கையாளரின் நீரிழப்பினைத் தடுப்பதற்கு தாதி உதவியாளர் செய்ய வேண்டியது,
    a) வாடிக்கையாளர் விழித்திருக்கும் போது தேவைக்கேற்ப திரவங்களை அடிக்கடி வழங்குதல்
    b) இரவில் மணித்தியாலத்திற்கு ஒரு தடவை பானங்களை வழங்குவற்கு வாடிக்கையாளரை எழுப்புதல்
    c) வாடிக்கையாளரை அடிக்கடி குளிக்க செய்தல்
    d) வாடிக்கையாளரின் தாகத்தினை அதிகரிப்பதற்கு உப்புச்செறிவுள்ள உணவுகளை வழங்குதல்

29. வாடிக்கையாளரை இடமாற்றும் போது அவரின் **பெருமளவான** பாரத்தினை தாங்க வேண்டியது தாதி உதவியாளரின்,
    a) முதுகினால்
    b) தோள்களினால்
    c) கால்களினால்
    d) மணிக்கட்டுகளினால்

30. வாடிக்கையாளரின் நிறை மிகச்சரியாக அளக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கு வாடிக்கையாளர் நிறுக்கப்பட வேண்டியது,
    a) உணவின் பின்னர்
    b) வேறொரு தாதி உதவியாளரினால்
    c) ஒவ்வொரு நாளும் ஒரே நேரத்தில்
    d) வேறுபட்ட அளவீடுகளைப் பயன்படுத்தி

31. தற்போது தான் குளிர் பானத்தினை அருந்திய வாடிக்கையாளர் ஒருவரின் வாய் வெப்பநிலையை அளவிடுவதற்கு முன்னர் நீங்கள் காத்திருக்க வேண்டியது,
    a) 10 தொடக்கம் வழ 20 நிமிடங்கள்
    b) 25 தொடக்கம் 35 நிமிடங்கள்
    c) 45 தொடக்கம் 55 நிமிடங்கள்
    d) ஆகக்குறைந்தது ஒரு மணித்தியாலம்

Wondershare PDFelement

32. பின்வருவனவற்றுள் எது ஒரு அழுக்கான தனிமைப்படுத்தப்பட்ட ஆடையை அகற்றுவதற்குரிய **சரியான** முறை ஆகும்?
    a) தலைக்கு மேலாக இழுத்து எடுத்தல்
    b) அதை கீழே விழவிட்டு வெளியில் செல்லுதல்
    c) அழுக்கான பகுதியை உள்ளே சுற்றி உடலில் இருந்து அகற்றுதல்
    d) கைகளால் கழற்றி அதை உதறுதல்

33. நோயாளர் உள்ள படுக்கை ஒன்றினை தயார் செய்யும் போது தாதி உதவியாளர் செய்ய வேண்டியது,
    a) அழுக்கு துணிகளை நிலத்தில் போடுதல்
    b) படுக்கையினை தயார் செய்யும் போது வாடிக்கையாளர் கதிரை ஒன்றில் அமர்ந்துகொள்வதற்கு உதவி செய்தல்
    c) படுக்கை விரிப்பினை மாற்றும் போது இரண்டு பக்க கம்பிகளையும் கீழே இறக்குதல்
    d) செயற்படாத பக்கத்தின் பக்க கம்பியை உயர்த்துதல்

34. எவ் வெப்பநிலை **மிகச்சரியானது** என கருதப்படுகிறது?
    a) வாய்
    b) அக்குள்
    c) கவடு
    d) குதம்

35. நிமிடத்திற்கு 60 அடிப்பிலும் பார்க்க நாடித்துடிப்பு வீதம் குறைவாக காணப்படும் நிலைமை ஆனது,
    a) ஓர்தோப்னியா (Orthopnea)
    b) ஹைப்பர்காப்னியா (Hypercapnia)
    c) பிராடிகார்டியா (Bradycardia)
    d) ரச்சிகார்டியா (Tachycardia)

Wondershare PDFelement

36. உடலியக்க அறிகுறிக்கு மிகப்பொருத்தமான வரைவிலக்கணம் ஆவது,
    a) மனித உள்ளடக்கத்தின் ஒரு பகுதியாகும்
    b) அடிப்படை உடற்தொழிற்பாட்டின் ஒரு குறிகாட்டியாகும்
    c) உடற்றொழிலியல் மற்றும் உடற்கூற்றியல்
    d) நோய் ஒன்றின் தோற்றப்பாடுகளும் அறிகுறிகளும்

37. நாடித்துடிப்பின் கனவளவு என்பதனால் கருதப்படுவது?
    a) ஒவ்வொரு அடிப்பின் போதும் நாடிகளின் சுவர்களுக்கு எதிராக பம்பப்படும் குருதியின் அளவு
    b) ஒவ்வொரு தடவை நாம் சுவாசிக்கும் போதும் இதயத்தினால் மேற்கொள்ளப்படும் அடிப்புகளின் அளவு
    c) இதய- சுவாச சுற்றோட்டத்தில் காணப்படும் குருதியின் மொத்த அளவு
    d) நாம் ஒவ்வொரு தடவை உட்சுவாசிக்கும் போதும் வெளிச்சுவாசிக்கும் போதும் கேட்கும் லப் மற்றும் டப் ஒலிகளின் அளவு

38. உடல் வெப்பநிலையானது $93.2^0$கு இலும் குறைவடையும் போது அந்த நபர் பாதிக்கப்படுவது மிக அதிகளவான,
    a) டிஸ்ப்னியா (Dyspnea)
    b) ஓர்தோப்னியா (Orthopnea)
    c) ஹைப்பர்தேர்மியா (Hyperthermia)
    d) ஹைப்போதேர்மியா (Hypothermia)

39. வாய்மூலமான வெப்பநிலை வாசிப்பினை பெற்றுக்கொள்ளும் போது கருவி பொதுவாக உட்செலுத்தப்படுவது,

a) முற்புற உமிழ்நீர் குழியினுள் (anterior sublingual cavity)
b) புக்கவாட்டு உமிழ்நீர் படுக்கையினுள் (lateral sublingual density)
c) பிற்புற உமிழ்நீர் பையினுள் (posterior sublingual pocket)
d) மேல் நாக்கு மேலணியினுள் (superior lingual mucositis)

40. அழுத்த காயத்தின் (pressure sore) முதல் அறிகுறி,

a) வீக்கம்
b) உணர்ச்சியற்ற தன்மை
c) நிறம் மாறுதல்
d) குளிர் தன்மை

41. ஒரு பேரழிவினை எதிர்கொள்வதற்கு தயார்ப்படுத்துவதற்கான மிகப் பொருத்தமான நேரம்,

a) வீடுகளை விட்டு வெளியேறும் போது
b) உணவு வேளையின் போது
c) எல்லோரும் பாதுகாப்பாக படுக்கையில் உள்ள போது
d) அது நடைபெறுவதற்கு முன்னர்

42. நான்கு அவுன்ஸ் பழச்சாற்றினை மில்லிலீற்றரில் (ml) மாற்றுவதற்கு நீர் பெருக்க வேண்டியது,

a) 4 x 5 ml
b) 4 x 10 ml
c) 4 x 15 ml
d) 4 x 30 ml

43. பிரசவத்திற்கு பின்னரான முதல் 24 மணித்தியாலங்களில் கண்டறியப்படும் சாதாரண கருப்பைத் திரவமானது (lochia) உள்ளடக்கியிருப்பது,

a) பிரகாசமான சிவப்பு நிற இரத்தம்
b) பெரிய இரத்த கட்டிகள் அல்லது இழைய துண்டுகள்
c) ஒரு துர்நாற்றம்
d) முற்றுமுழுதாக கருப்பைத் திரவமானது காணப்படாமை

44. ஒரு குழந்தை பொருட்களை பற்றிப்பிடிக்க ஆரம்பிக்கும் வயது மாதங்களில்

a) 4-6 மாதங்கள்
b) 6-8 மாதங்கள்
c) 3-4 மாதங்கள்
d) 0-3 மாதங்கள்

45. ஒரு நோயாளர் ஒரு போத்தல் 5 மில்லிகிராம் வார்பாரின் (Warfarin) மாத்திரைகளை தனது வீட்டில் வைத்திருக்கின்றார். அவரது மிகக்கிட்டிய சர்வதேச சாதாரணமாக்கப்பட்ட விகிதத்திற்கிணங்க (INR) மருத்துவர் அவருக்கு ஒரு நாளைக்கு 7.5 மில்லிகிராம் (7.5 mg/day) மருந்தினை சிபாரிசு செய்கின்றார். எனவே, அந் நோயாளர் ஒரு நாளைக்கு எத்தனை மாத்திரைகளை எடுக்க வேண்டும்?

a) 1
b) 1.5
c) 2
d) 2.5

Wondershare PDFelement

46. மருத்துவர் நோயாளர் ஒருவருக்கு ஒவ்வொரு நாள் காலையிலும் 100 மைக்கிரோகிராம் லீவோதைரொக்சின் (Levothyroxine (Synthroid) 100 mcg) இனை சிபாரிசு செய்துள்ளார். எனினும் மருந்தகத்தில் 0.05 மில்லிகிராம் மாத்திரைகளே வழங்கப்பட்டன. எனின் அந்நோயாளர் ஒரு தடவைக்கு எத்தனை மாத்திரைகள் எடுக்க வேண்டும்?
   a) 1
   b) 1.5
   c) 2
   d) 2.5

47. ஒரு புதிய தாய் பிரசவித்த இரண்டு வாரங்களில் இடது மார்பில் வலி இருப்பதாக கூறினார். அதை பரிசோதித்த போது இடது மார்பு சிறிதளவு பெரிதாகவும் அழுத்திய போது மென்மையாகவும் இருப்பது அவதானிக்கப்பட்டது. பெரும்பாலும் இந்நிலைமையாக இருக்கக்கூடியது?
   a) நார்க்கட்டி மார்பு ஒழுங்கனம்
   b) கான் புற்று நோய்
   c) மடியழற்ச்சி
   d) பினைன் கட்டிகள் (Benign cyst)

48. பின்வருவனவற்றுள் எது தொப்புள் நாண் அடியின் தொற்றிற்கான அறிகுறியாக இருக்கலாம்?
   a) தொப்புள் கொடி விழும் போது குருதி வெளியேறுதல்
   b) தொப்புளை சுற்றி வீக்கம் மற்றும் சீழ் காணப்படுதல்
   c) குழந்தை அடிக்கடி அழுதல்
   d) தொப்பூள் கொடியின் அடி கறுப்பு நிறமாதல்

Wondershare PDFelement

49. வாடிக்கையாளரின் உரிமைப்பத்திரத்திற்கு இணங்க, வாடிக்கையாளர் ஒருவரை பராமரிக்கும் போது நீங்கள் செய்ய வேண்டியது?
   a) தனிப்பட்ட பராமரிப்பு செய்முறைகளை மேற்கோள்ளும் போது தனிமையை வழங்குதல்
   b) வாடிக்கையாளரின் கடிதத்தினை அவரின் அனுமதி இன்றி திறத்தல்
   c) வாடிக்கையாளரின் தனிப்பட்ட பொருட்களை வேறொருவரிற்கு பயன்படுத்தல்
   d) வாடிக்கையாளர் பராமரிப்பு தொடர்பாக முறைப்பாடு செய்வதை தடை செய்தல்

50. பிரெஞ் பேசும் நோயாளர் ஒருவரிற்கு அவசரமாக லப்பிரோரொமி (Laparotomy) மேற்கொள்ளப்பட்டது. அவரை விடுவிப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகளின் போது பின்வருவனவற்றுள் எந்த நடவடிக்கை அவரது காயத்தினை பராமரிப்பது தொடர்பான அறிவினை பெற்றுக்கொள்ள மிகவும் உதவியாக இருக்கும்?
   a) நோயாளரிடம் அவர் அறிவுறுத்தலை சரியாக புரிந்து கொண்டுள்ளாரா என அடிக்கடி கேட்டல்
   b) அறிவுறுத்தல் தொடர்பாக அவரிற்கு விளக்குமாறு மொழிபெயர்ப்பாளரிடம் கேட்டல்
   c) அறிவுறுத்தல்களை எழுதி அவரின் குடும்ப நபரிடம் கொடுத்து அவரிற்கு வாசித்து காட்டுமாறு கூறுதல்
   d) செய்முறையை செய்து காட்டி அதனை மீண்டும் அவர் செய்து காட்டுமாறு செய்தல்

(01 x 50 = 50 புள்ளிகள்)

Wondershare PDFelement

அனைத்து உரிமைகளும் பெற்றது

# மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ணைக்குழு

## அறிவுசார் கணிப்பீடு – ஜூலை 2022

## தாதி உதவியாளர்

## தேசிய தொழிற்தகைமை மட்டம் 04

**நேரம்: 1 ½ மணித்தியாலங்கள்**

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

- இவ் வினாத்தாளில் முதலாவது (01) வினா உட்பட ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்கவும். (முதலாவது (01) வினாவுக்கு விடையளித்தல் கட்டாயமானதாகும் என்பதுடன் விடைனளிக்க வேண்டிய மொத்த வினாக்களின் எண்'ணிக்கை ஐந்து (05) ஆகும்)
- வினாத்தாளில் வழங்கப்பட்டுள்ள இடங்களில் விடையளிக்கவும்.
- இவ் வினாதாள் 08 பக்கங்களைக் கொண்டுள்ளது.

---

**பகுதி 2**

1.

i). மருந்து வழங்கல் தொடர்பான ஆறு (6) உரிமைகளை எழுதுக? (03 புள்ளிகள்)

ii). மருத்துவர் ஒரு வாடிக்கையாளரிற்கு ஸ்ரெப்ரோமைசின் 3.5mg/Kg IM 12hr என சிபாரிசு செய்கின்றார். இருப்பினும் ஸ்ரெப்ரோமைசின் 0.35g/2ml தான் கிடைக்கப்பெறுகின்றது. 60 கிலோகிராம் நிறையுடைய வாடிக்கையாளரிற்கு ஒரு நாளைக்கு எத்தனை மில்லிலீற்றர் மருந்தினை வழங்குவீர்? (02 புள்ளிகள்)

iii). ஒரு மருத்துவர் ஒன்டாசெற்றோன; (எமிசெற்) 8mg p.o.tds இனை ஒரு வாடிக்கையாளரிற்கு சிபாரிசு செய்துள்ளார். ஆனால் 4 mg/tsp ஒன்டாசெற்றோன்

Wondershare PDFelement

மருந்தே கிடைக்கக்கூடியதாக உள்ளது. ஒரு வாடிக்கையாளரிற்கு ஒரு தடவைக்கு எத்தனை மில்லி லீற்றர் மருந்தினை நீர் வழங்க வேண்டும்?

(02 புள்ளிகள்)

iv). ஒரு மருத்துவர் 125 மி.கி. திரவ மருந்தினை ஒரு கர்ப்பிணி வாடிக்கையாளரிற்கு சிபாரிசு செய்கிறார். அம் மருந்து 100 மி. லீ. போத்தலில் காணப்படுவதுடன் அதன் ஒவ்வொரு 5 மி.லீ இலும் 250 மி.கி. மருந்து காணப்படுகின்றது. ஒரு தடவைக்கு எத்தனை மி. லீ. மருந்தினை அவ்வாடிக்கையாளரிற்கு நீர் வழங்குவீர்?

(03 புள்ளிகள்)

Wondershare PDFelement

2.

i). மருத்துவ பதிவேடுகள் தொடர்பாக ஒரு தாதி உதவியாளரின் நெறிமுறை மற்றும் சட்டரீதியான பொறுப்புக்கள் இரண்டினை (2) விபரிக்குக?

(02 புள்ளிகள்)

Wondershare
PDFelement

ii). வாடிக்கையாளரின் மூன்று (3) உரிமைகள் தொடர்பாக விபரிக்குக?
(03 புள்ளிகள்)

iii). வாடிக்கையாளரின் நடமாட்டத்தினை தடைசெய்யும் சந்தர்ப்பங்களின் போது பின்பற்றவேண்டிய பாதுகாப்பு விதிமுறைகள் இரண்டு தருக? (02 புள்ளிகள்)

Wondershare
PDFelement

iv). சிகிச்சை சம்பந்தமான தொடர்பாடலில் செல்வாக்கு செலுத்தும் (03) மூன்று தடைகளை குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

Wondershare
PDFelement

3.

i). நோயாளர் ஒருவருக்கு படுக்கைக் குளியல் இனை மேற்கொள்வதற்கான நோக்கங்கள் 04 இனை விபரிக்குக? (04 புள்ளிகள்)

ii). படுக்கையில் உள்ள ஒரு நோயாளருக்கு அழுத்த காயங்கள் தோன்றுவதை தடுப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் 03 இனை விபரிக்குக? (03 புள்ளிகள்)

Wondershare
PDFelement

iii). படுக்கை தயாரிப்பதன் மூன்று கேபட்பாடுகளை எழுதுக?

(03 புள்ளிகள்)

Wondershare
PDFelement

4.

i). நோய்த்தொற்று சங்கிலியை எழுதுக? (02 புள்ளிகள்)

ii). "Medical asepsis" மற்றும் "surgical asepsis" ஆகிய பதங்களை வரைவிலக்கணப்படுத்துக? (04 புள்ளிகள்)

Wondershare
PDFelement

iii). ஓர் ஆரோக்கிய பராமரிப்பு நிலையத்தில் குறுக்குதொற்று ஏற்படுவதை தடுப்பதற்கு உங்களால் மேற்கொள்ளக்கூடிய நான்கு செயற்பாடுகளை விபரிக்குக? (04 புள்ளிகள்)

Wondershare PDFelement

5.

i). ஒரு வயது முதிர்ந்த நோயாளியின் முக்கியமான அறிகுறிகளின் சாதாரண வீச்சுகளை தருக? (04 புள்ளிகள்)

| | முக்கிய அறிகுறிகள் | பெறுமதிகள் |
|---|---|---|
| 1 | சுவாசவீதம் | |
| 2 | உடல் வெப்பநிலை | |
| 3 | குருதிஅமுக்கம் | |
| 4 | நாடித்துடிப்பு வீதம் | |

ii). ஆவி பிடிப்பதன் மூன்று நோக்கங்களை விபரிக்குக? (03 புள்ளிகள்)

Wondershare PDFelement

iii). 104 பாகை பரனைட் வெப்பநிலையை உடைய ஒரு நோயாளிக்கு வழங்க வேண்டிய பராமரிப்பு தொடர்பாக விபரிக்குக?
(03 புள்ளிகள்)

Wondershare
PDFelement

6.

i). . கீழே தரப்பட்டுள்ள சுவாசத் தொகுதியின் கட்டமைப்பின் பகுதிகளை பெயரிடுக?

(03 புள்ளிகள்)




| | |
|---|---|
| A | |
| B | |
| C | |
| D | |
| E | |
| F | |
| G | |

Wondershare
PDFelement

ii). உட்சுவாசம் மற்றும் வெளிச்சுவாசம் ஆகிய பதங்களை விளக்குக?

(04 புள்ளிகள்)

iii). ஈரலின் மூன்று (03) தொழிற்பாடுகளை விபரிக்குக? (03 புள்ளிகள்)

Wondershare
PDFelement

7.

i). பிரசவத்திற்கு பின்னரான குருதி இழப்பிற்கான காரணங்கள் மூன்று (03) தருக?

(03 புள்ளிகள்)

ii). பிரசவத்திற்கு பின்னரான சிக்கல் நிலைமைகள் மூன்றை விபரிக்குக? (03 புள்ளிகள்)

Wondershare
PDFelement

iii). தாய்ப்பால் ஊட்டுவதால் தாயிற்கு கிடைக்கும் நன்மைகள் இரண்டையும் குழந்தைக்கு கிடைக்கும் நன்மைகள் இரண்டையும் விபரிக்குக?

(04 புள்ளிகள்)